மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 75, டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

75—

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு சிறப்பங்காடி.

*5789—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மில் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு அங்காடி உள்ளது போல் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவு சிறப்பங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மில் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு சிறப்பங்காடி, சூப்பர் மார்க்கெட் இருப்பதைப் போல தேயிலைத்தோட்ட தொழிலாளர்களுக்கும் அமைக்கின்ற எண்ணம் இந்த அரசுக்கு உண்டு. அப்படி சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத் திடம் இருந்து முறையான முன்மொழிவு வருமானால் அவைகளை தகுதி அடிப்படையிலே பரிசீலனை செய்து அரசு முடிவெடுக்கும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்ப தாக சொன்னார். என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இப்படி அமைக்கப்படுகின்ற தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங் கள் எத்தனை தொழிலாளர்கள் உள்ளடக்கியதாக அந்த கூட்டுறவு சங்கம் அமையும், எவ்வளவு தூரங்களை உள்ளடக்கியதாக அமையும் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய சூப்பர் மார்க்கெட்டுகளை மாவட்ட அல்லது வட்ட அளவில் ஒல்சேல் ஸ்டோர்ஸ் தான் இந்த மொத்த விற்பனைப் பண்டக சாலைகளை நடத்தி வரு கின்றன. பிரைமரி ஸ்டோர்ஸ் இப்படிப்பட்ட கூட்டுறவு சிறப் பங்காடிகளை நடத்துவதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட மொத்த விற்பனை பண்டக சாலைகள் முன்மொழிவு அனுப்பினால் அந்த விதிகளின் அடிப்படையிலே பரிசீலனை செய்யலாம்.

1992 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 76, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

76—

போளூரில் வேளாண்மைக் கல்லூரி.

*6151 திரு. தா. வேடியப்பன் :
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விவசாய மக்கள் நிறைந்த போளூர் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் போளூரில் புது வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை. இது தொடர்பான மற்றொரு கேள்விக்கு இடமில்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நான் திண்டிவனம் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது போளூர் தொகுதியில் எங்கள் அத்திமூர் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி நிறுவுவதற்கு என்று அனைத்து குறிப்புகளுடன் அரசு அதிகாரிகள் வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டு இடம் ஒதுக்கப்பட்டது. அதனுடைய குறிப்பு அடிப்படையிலே கூடிய விரைவில் அடுத்த நிதி ஆண்டிலாவது இதனைப் பரிசீலித்து நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வேளாண்மை மக்கள் நிறைந்த பகுதியாகிய போளூர் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வேளாண்மைக் கல்லூரி துவக்கப்படுகின்ற காலத்தில் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 77, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.